இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | facebook.com/murasoli180 | twitter.com/murasoli180 | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | instagram.com/murasoli180 | youtube.com/murasoli180 | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 349 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 13 – சனிக்கிழமை 29 ஜூலை 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 349 : Thiruvalluvar Year - 2054 - Aadi 13 - Saturday 29 July 2023 - Chennai 16 Pages ₹ 5.00

# அர்ச்சகர் ஆவதற்கு சாதி தடையில்லை!

## சென்னை உயர்நீதிமன்றம் மீண்டும் உத்தரவு!

**சென்னை, ஜூலை 29-**

**அர்ச்சகர் ஆவதற்கு சாதி தடையில்லை; இந்த வழக்கில் தனி நீதிபதி அளித்த தீர்ப்புக்கு தடை விதிக்க முடியாது என்று சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கங்கா பூர்வாலா, நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று தீர்ப்பு வழங்கியது.**

சேலம் சுகவனேஸ்வரர் கோயிலில் காலியாக உள்ள அர்ச்சகர் பணியிடங்களை நிரப்ப கோயில் செயல் அலுவலர் கடந்த 2018ல் அறிவிப்பாணை வெளியிட்டார்.

ஆனால் இந்த அறிவிப்பு ஆகம விதிகளை பூர்த்தி செய்யவில்லை எனக்கூறி, அந்த கோயிலில் பரம்பரை அர்ச்சகராகப் பணியாற்றிவரும் முத்து சுப்ரமணிய குருக்கள் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 23ஆம் தேதியன்று வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் முன்பாக நடந்து வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஆர்.சிங்காரவேலன், ஆகம விதிகளைப் பின்பற்றும் கோயில்களில் ஆகம விதிகளின் படியே அர்ச்சகர் நியமனமும் கண்டிப்பாக நடைபெற வேண்டும் என ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. ஆகம விதிகளைக் கடைப்பிடிக்கும் கோயில்களை இனம் கண்டு, அறிக்கை சமர்ப்பிக்க ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைத்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அந்தக்குழு இதுவரையிலும் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்பதால், அதுவரை அர்ச்சகர் நியமனங்களை தள்ளிப்போட வேண்டும். சேலம் சுகவனேஸ்வரர் கோயிலில் ஆகம விதிகளின்படி பாரம்பரியம், கோயில் மரபு மற்றும் வழக்கத்துக்கு உட்பட்டே அபிஷேகம் மற்றும் ஆராதனைகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல, கோயில் செயல் அலுவலர், தக்காராக செயல்பட்டு அர்ச்சகர் பணியிடங்களை நிரப்ப அறிவிப்பாணை வெளியிட முடியாது என வாதிட்டார்.

பதிலுக்கு அறநிலையத்துறை சார்பில் ஆஜரான சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ஆர்.ஆர். அருண் நடராஜன், “ஆகம விதிகளைப் பின்பற்றும் கோயில்களைக் கண்டறிய அமைக்கப்பட்டுள்ள குழுவின் செயல்பாடுகளுக்கு, உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளதால் அந்தக் குழு இன்னும் முழுவீச்சில் இயங்கவில்லை.



எனவே, ஆகம விதிகளை கடைப்பிடிக்கும் கோயில் களில் தலைமை அர்ச்சகர்கள் அளிக்கும் தகுதிச்சான்றின் அடிப்படையில் ஆகம விதிகளில் தேர்ச்சி பெற்ற தகுதியான நபர்களை அரச்சகர்களாக நியமிக்க அனுமதியளிக்க வேண்டும்.

கோயில்களில் அர்ச்சகர், ஸ்தானிகர் உள்ளிட்ட காலி பணியிடங்களை நிரப்ப அறிவிப்பாணை வெளியிட தக்கார் என்ற முறையில் கோயில் அலுவலருக்கு முழுஅதிகாரமும் உள்ளது” என வாதிட்டார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் அப்போது பிறப்பித்துள்ள தீர்ப்பில், “ஆகம விதிகளைப் பின்பற்றும் கோயில்கள் எவை என்பதைக் கண்டறிய அமைக்கப்பட்டுள்ள குழு இன்னும் தனது பணிகளை தொடங்கவில்லை. அந்தக்குழு அறிக்கை சமர்ப்பிக்கும் வரை அர்ச்சகர்களை நியமிக்கக்கூடாது என உயர் நீதிமன்ற உத்தரவில் குறிப்பிடப்படவில்லை. பல கோயில்களில் அர்ச்சகர் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் அந்தக் குழுவின் அறிக்கைக்காக காத்திருந்தால், அன்றாடம் நடைபெற வேண்டிய பூஜை, அபிஷேகம் போன்றவற்றை தடையின்றி மேற்கொள்வதில் சிக்கல் ஏற்படும். சேலம் சுகவனேஸ்வரர் கோயிலைப் பொருத்தமட்டில் ‘ஆகமம்’ பின்பற்றப்படுவதாக சொத்துப் பதிவேட்டில் உள்ளதாக அரசு தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

எனவே, ஆகம விதிகளில் தேர்ச்சி பெற்ற தகுதியான நபர்களை, குறிப்பிட்ட ஆகம விதிகளைப் பின்பற்றும் கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கலாம். அதற்கு எந்தவொரு சாதியும் தடையாக இருக்காது.

இந்த வழக்கைப் பொருத்தமட்டில் சேலம் சுகவனேஸ்வரர் கோயிலில் புதிதாக அர்ச்சகர்களை தேர்வு செய்யும் வரை மனுதாரர் பணியில் தொடர அனுமதிக்க வேண்டும். பின்னர் நடத்தப்படும் தேர்வில் மனுதாரரையும் பங்கேற்க அனுமதித்து முடிவு எடுக்க வேண்டும்” என உத்தரவிட்டிருந்தார்.

இந்த தீர்ப்பை எதிர்த்து மனுதாரர் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்நிலையில் இந்த மேல்முறையீட்டு வழக்கு தலைமை நீதிபதி கங்காபூர்வாலா, நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், “ஆகம கோவில்களில் அர்ச்சகர்கள் பரம்பரையைத் தான் நியமிக்க வேண்டும். தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும்” என வாதிடப்பட்டது.

இதனைக் கேட்ட நீதிபதிகள் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்கால தடை விதிக்க மறுப்பு தெரிவித்தனர்.

அர்ச்சகர் நியமனத்தில் சாதிக்கு எந்த பங்கும் இல்லை. யார் வேண்டுமானாலும் அர்ச்சகர் ஆகலாம். என்று உத்தரவிட்டு இந்த வழக்கில் இந்து சமய அறநிலையத்துறை விளக்கமளிக்க உத்தரவிட்டு செப்டம்பர் 22ஆம் தேதிக்கு வழக்கை ஒத்தி வைத்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (28.07.2023) முகாம் அலுவலகத்தில், ஆசிய செஸ் கூட்டமைப்பின் துணைத் தலைவர் பரத் சிங் சௌகான் அவர்கள் தலைமையில் செஸ் கூட்டமைப்பினர் நேரில் சந்தித்து, 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியை வெற்றிகரமாக நடத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆசிய செஸ் கூட்டமைப்பின் சார்பில் வழங்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த மனிதருக்கான விருதினை (Man of the Year Award) வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, அகில இந்திய செஸ் கூட்டமைப்பின் தலைவர் சஞ்சய் கபூர், துணைத் தலைவர் பவேஷ் பட்டேல், செயலாளர் விபினேஷ் பரத்வாஜ், பொருளாளர் நரேஷ் ஷர்மா ஆகியோர் உடனிருந்தனர்.

### மணிப்பூர் கொடூரத்தை விவாதிக்க மறுப்பதால்

## 7வது நாளாக நாடாளுமன்றம் முடங்கியது!

புதுடெல்லி, ஜூலை 29-

மணிப்பூர் விவகாரத்தில் பிரதமர் மோடி விளக்க மளிக்க வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வரு கின்றன. இதனால்அவைநடவடிக்கைகள் முடங்கி வருகிறது.

அந்த வகையில் நேற்றும் மக்களவை, மாநிலங்களவையில் எதிர்க்கட்சியினர் தொடர் அமளியில் ஈடுபட்டனர். இதனால், 7வது நாளாகஅவைநடவடிக்கைகள்முற்றிலும்முடங்கியது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் எப்போது விவாதத்திற்குஎடுத்துக்கொள்ளப்படும் என்று மக்களவையில் கேள்வி எழுப்பிய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். அதற்கு சபாநாயகர் ஓம் பிர்லாபல்வேறுகட்சிதலைவர்களுடன் ஆலோசனை நடத்தி, இதுகுறித்து முடிவெடுக்கப்படும்என்றுதெரிவித்தார்.



இருப்பினும், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தங்கள்எதிர்ப்பைத்தொடர்ந்து பதிவு செய்ததால் மக்களவைமதியம்12மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதை போலவே மணிப்பூர் விவகாரம் குறித்து எதிர்க் கட்சிகள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தன. அப்போது திரிணாமுல் காங்கிரஸ்கட்சியின்டெரிக் ஓ பிரையன் ஆவேசமாக பேசினார்.

அவரது செயலுக்கு கண்டனம் தெரிவித்த மாநிலங்களவைதலைவர்ஜெகதீப்தன்கர்,மாநிலங்களவையை நாள் முழுவதும் ஒத்தி வைத்தார்.

மேலும் சனி, ஞாயிறு விடுமுறைக்குபிறகுதிங்கள் கிழமை காலை 11 மணிக்கு மாநிலங்களவைகூடும்என் றும் அவர் தெரிவித்தார்.

### நிலைமையை நேரில் கண்டறிய

## ‘இந்தியா’ கூட்டணித் தலைவர்கள் - இன்று மணிப்பூர் பயணம்!

### நாளையும் மக்களைச் சந்தித்து ஆறுதல்!

புதுடெல்லி,ஜூலை29-

‘இந்தியா’கூட்டணிசார்பில்எம்.பி.க்கள்குழு2நாள் பயணமாக இன்றும், நாளையும் மணிப்பூர் மாநிலத்துக்கு செல்லும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூர் மாநிலத்தில் பெரும்பான்மையினராக இருக்கும் மெய்தி இன மக்களுக்கு பழங்குடியின அந்தஸ்துவழங்கஎதிர்ப்புதெரிவித்து, குக்கி பழங்குடியின மக்கள் கடந்த மே மாதம் 3ஆம் தேதி நடத்திய பேரணியில் வன்முறை வெடித்ததை தொடர்ந்து, அங்கு கடந்த 85 நாட்களுக்கும் மேலாக கலவரம் நீடித்து வருகிறது.

இந்த கலவரத்தில் 160க்கும்மேற்பட்டோர்உயிரிழந்த நிலையில், ஆயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்தனர். மேலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வன்முறை பாதித்த பகுதிகளில் இருந்து வெளியேறி நிவாரண முகாம்களில்தஞ்சம் அடைந்து இருக்கிறார்கள்.

பழங்குடியினப் பெண்கள் குக்கி பழங்குடியினத்தை சேர்ந்த 2 பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக இழுத்துச் சென்ற சம்பவம் மற்றும் அங்கு பெண்களுக்கு எதிராகநடந்தபல்வேறுவன்முறைச்சம்பவங்கள்நாடுமுழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன.

மணிப்பூர் வன்முறை தொடர்பானஉண்மைநிலவரங்களை நாட்டு மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி விளக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கடந்த ஒருவாரமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.நாடாளுமன்றத்தின் வழக்கமான அலுவல்களை ஒத்திவைத்து விட்டு, மணிப்பூர் விவகாரத்தை விவாதிக்க வேண்டும் என்று விதி எண்: 267 இன் கீழ் இந்தியா கூட்டணியின்51எம்.பி.க்கள், ஒத்திவைப்பு நோட்டீஸ்களை அளித்தனர். அத்துடன் கடந்த ஒருவாரமாக நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினையைக் கிளப்பி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதனால், ஜூலை 20 அன்று நாடாளுமன்றம் துவங்கியது முதலே முடக்கம் கண்டு வருகிறது. பிரதமர் நரேந்திர மோடியை நாடாளுமன்றத்திற்கு வரவழைப்பதற்கான வியூகம் என்ற வகையில், ஒன்றிய பா.ஜ.க. அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ளன. ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக காங்கிரஸ் மக்களவை துணைத்தலைவரும்அசாம் மாநில எம்.பி.யுமான கவுரவ் கோகோய் புதனன்று மக்களவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்.

பாரத்ராஷ்டிரசமிதிகட்சியின் மக்களவைத் தலைவர் நாகேஸ்வர்ராவும் தனியாக ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். காங்கிரஸ் எம்.பி. கவுரவ் கோகோய் முன்வைத்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு காங்கிரஸ், தி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிஉள்ளிட்டஅனைத்து எதிர்க்கட்சிகளும் ஆதரவு அளிப்பதாக அறிவித்த நிலையில், எதிர்க் கட்சிகளின் நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதாகவும்அனைத்துக்கட்சித் தலைவர்களுடனும் விவாதித்து, விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கான சரியான நேரத்தை உங்களுக்குத்தெரிவிப்பேன்என மக்களவை தலைவர் ஓம் பிர்லாகூறியிருக்கிறார். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைஅவர்உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வாய்ப்பில்லை என்ற நிலை உள்ளது.

இந்நிலையில், வியாழனன்று நாடாளுமன்றம் கூடியநிலையில்,மணிப்பூர் விவகாரத்தில் மோடி அரசின் அலட்சியத்தைக் கண்டித்து, “இந்தியா”கூட்டணியில் உள்ள மக்களவை, மாநிலங்களவை அனைத்து எம்.பி.க்களும் “கறுப்பு” நிற ஆடைகளை அணிந்து நாடாளுமன்றத்திற்குவந்தனர்.

இதனிடையே, பிரதமர் மோடிஇதுவரைமணிப்பூர் மக்களைஎட்டிப்பார்க்காத நிலையில், பா.ஜ.க.வின் வகுப்புவாத அரசியலால் பற்றி எரியும் மணிப்பூரின் உண்மை நிலையை ஆய்வு செய்ய “இந்தியா” கூட்டணியைச்சேர்ந்த அனைத்து எம்.பி.க்களும் ஜூலை 29, 30ஆகிய தேதிகளில் மணிப்பூர்செல்லதிட்டமிட்டுள்ளனர்.

இதையடுத்து இந்தியா’ கூட்டணி கட்சி எம்.பி.க்கள் இன்று மணிப்பூர் சென்று அங்குள்ள நிலவரத்தை ஆய்வு செய்கின்றனர். நாளையும் அவர்கள் அங்கு தங்குகின்றனர்.

### பி.என்.ஒய்.எஸ். யோகா

## இயற்கை மருத்துவப் படிப்புக்கான மாணவர் சேர்க்கை!

### இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை அறிவிப்பு!

சென்னை,ஜூலை.29-

2023-2024ம் கல்வியாண்டில் அரசு மற்றும் சுயநிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளில் உள்ள அரசு & அரசு ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கான பி.என்.ஒய்.எஸ். யோகா மற்றும் இயற்கை மருத்துவப் படிப்பு (5 ½ ஆண்டுகள்) சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் தனித்தனியாக தகுதியுள்ளவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. கல்வித்தகுதி : +2

மேற்கண்ட பட்டப் படிப்புகளுக்கான (விண்ணப்பப் படிவம், தகவல் தொகுப்பேட்டினை, www.tnhealth.tn.gov.in என்ற வலைதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். விண்ணப்பப்படிவங்கள் ஆணையரக அலுவலகத்திலோ அல்லது தேர்வுக் குழு அலுவலகத்திலோ அல்லது வேறு எந்த ஆயுஷ்முறை மருத்துவக் கல்லூரிகளிலோ வழங்கப்படமாட்டாது.) மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க தேவையான தகுதிகள், விண்ணப்பக் கட்டணம் மற்றும் பிற கட்டண விவரங்கள்., கலந்தாய்விற்கான அட்டவணை மற்றும் பிற தகவல்களினை www.tnhealth.tn.gov.in என்ற இணையதளத்தில் உள்ள உரிய தகவல் தொகுப்பேட்டில் அறியலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம். கோரப்பட்டுள்ள அனைத்துச் சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட நகல்களையும் இணைத்து செயலாளர், தேர்வுக்குழு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் அலுவலகம், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனை வளாகம், அரும்பாக்கம், சென்னை 600 106 என்ற முகவரிக்கு 14.08.2023 மாலை 5.30 மணிக்குள் சமர்ப்பித்தல் / வந்து சேர வேண்டும்.

30.07.2023 முதல் 14.08.2023 மாலை 5.00 மணி வரை விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினைப் பதிவிறக்கம் செய்யலாம்.

14.08.2023 மாலை 5.30 மணி வரை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் தபால் / கூரியர் சேவை வாயிலாக அல்லது நேரில் சமர்ப்பிக்கலாம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.